Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி - 30 13-06-2003 வெள்ளிக்கிழமை ஓசை 115

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்



வவுனியா ஒப்டிக்கல், 30 பஸ் நிலையம், வவுனியா.

(தி-7864)

## சிறிலங்காப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# போராளியை விடுதலை செய்யக்கோரி

# மட்டக்களப்பு, அம்பாறையில் ஹர்த்தால்

## கடைகள் மூடப்பட்டன; வீதிகள் வெறிச்சோடின

(மட்டக்களப்பு)

**விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்யக்கோரியும் இராணுவ வீதிச்சோதனைகளைக் கண்டித்தும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் வர்த்தக நிலையங்கள், சந்தைகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள் அனைத்தும் ஸ்தம்பித நிலையடைந்தன. வீதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன.**

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. பெருமளவு பொலிசாரும் படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான பேருந்து சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

அத்துடன் பாடசாலைகள் அனைத்திலும் மாணவர் வரவு இன்மை காணப்பட்டது. பொதுச் சந்தை இயங்காததுடன் அரச திணைக்களங்களின் ஊழியர் வரவு குறைவாகவும் காணப்பட்டது.

மட்டு. மாவட்ட நீதிமன்றில் இடம்பெற இருந்த வழக்குகள் வேறொரு திகதிக்கு மாற்றப்பட்டது. மட்டு நகர் இயல்பு நிலை இழந்து காணப்பட்டதாக தெரியவருகின்றது. விடுதலைப்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் சத்தியராஜ்

(iv ஆம் பக்கம் பார்க்க)





நேற்றைய ஹர்த்தாலின் போது கடைகள் மூடப்பட்டு இருப்பதையும் வீதிகள், பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

## கொழும்பில் ஒன்பதுபேர் இரகசியப் பொலிசாரால் கைது

வெள்ளவத்தையில் இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்ட சம்பவம் தொடர்பாக கொழும்பில் பிரபல திரையரங்கின் ஊழியர்கள் உட்பட ஒன்பது பேர் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறிலங்காப் பொலிசார் சோதனையிட முயன்றபோது சயனைட் உட்கொண்டார் எனக் கூறப்படும் இளைஞர் தங்கியிருந்த கொட்டாஞ்சேனை வீட்டிலும் பொலிசார் சோதனை நடத்தியுள்ளனர்.

## கணக்கு விபரம் சந்திரிகா கோரல்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த வருடம் முதலான செலவினங்கள் உட்பட பல விடயங்களுக்கு விளக்கம் தருமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவருக்குப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வேண்டுகோள்

தமிழீழ பதிவினை மேற்கொண்டவர்திகள் அடையாள இலக்கத்தினை முன், பின்அடையாளப் படுத்திட பயன்படுத்துமாறும் 2003 வரியிட்டை தமிழீழ பதிவுப்புத்தக மின்றி ஊர்திகளை கைமாற்றம் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும், வரியட்டையில்லாத ஊர்திகட்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், த.மோ.ஊ.வ.பகுதியினர் மீண்டும் அறியத்தருகின்றனர்.

## அமைச்சர் பீரிஸ் நேற்று புதுடில்லிக்குச் சென்றார்

(கொழும்பு)

டோக்கியோ மாநாடு தொடர்பாகவும், சமாதான நடவடிக்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் இந்திய அரசிற்கு அறிவிப்பதற்காக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று டோக்கியோவில் இருந்து புதுடில்லி பயணமானார். இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹாவை நேற்றிரவு அவர் சந்தித்துப் பேசினார். மேலும் இந்தியப் பிரதமரின் வெளிவிவகார ஆலோசகரையும் பெங்களூரில் சந்தித்துப் பேசவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# டோக்கியோ மாநாடு குறித்து ஆராய பிரதமருக்கு சனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்து விவாதிக்க சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் வழங்கப்பட்ட நிதியில் பெரும் பாலான பகுதி மோசமான நிபந்தனைகளுடன் கூடிய கடன்களாக உள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தலையிடுமாறும் கோரியிருந்தனர்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியை இன்று சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ரணில் தலைமையிலான குழு நேற்று கொழும்பு திரும்பியது

(கொழும்பு)

ஜப்பானில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச மட்ட தூதுக்குழு நேற்று அதிகாலை கொழும்பு திரும்பியது.

பிரதமரையும் அரசாங்க மட்ட குழுவையும் வரவேற்பதற்காக அமைச்சர்கள் பலரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்டுநாயக்க விமானநிலையம் சென்றிருந்தனர்.

## உபவேந்தர்கள் சனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகங்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து சிறிலங்கா சனாதிபதி நேற்று அனைத்துப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுடன் பேச்சுவார்த்தை

(iv ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனைப் பகுதியில்

## தேநீர்க் கடைமீது குண்டு வீச்சு; நால்வருக்கு பலத்த காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவமொன்றில் நான்கு பேர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

வாழைச்சேனை பழைய பேருந்து நிலையம் அருகாமையிலுள்ள தேநீர்க் கடையொன்றின் மீதே மாலை 6.00 மணியளவில் இந்தக் கைக் குண்டு வீச்சு இடம் பெற்றது.

இனந்தெரியாத ஒருவராலேயே கைக் குண்டு வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அரச மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை மேலும் விஸ்தரித்துள்ளமையால் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் வைத்திய சேவைகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்த போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக மாவட்ட வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், சுற்றயல் கூறு வைத்தியசா

(iv ஆம் பக்கம் பார்க்க)

### உயர் கல்வியை அரசு தனியார் மயமாக்க முயற்சி

## எதிராக 10 லட்சம் கையொப்பம் திரட்ட ஜே.வி.பி. முயற்சி

உயர்கல்வியை அரசாங்கம் தனியார்மயமாக்க முயற்சிப்பதாகக் கூறி அதற்கு எதிராக 10 லட்சம் கையொப்பங்களைத் திரட்டும் போராட்டம் ஒன்றை ஜே.வி.பி நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

20 மாவட்டங்களிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், மாணவர்களிடமிருந்து இந்த 10 லட்சம் கையொ

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி

G.A.Q,B.A வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் 2மணி தொடக்கம் 5மணிவரை நடைபெறுகின்றன. நிர்வாகி. (3308)

### தேங்காய் விற்பனைக்குண்டு

தேங்காய் ஒரு லொறிலோட் விற்பனைக்குண்டு. இரட்னஸ்பாம் சுதந்திரபுரம், உடையார்கட்டு. (முல்லை) (3321)

### விற்பனைக்குண்டு

தரமான புழுக்கொடியல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங் களின் பேரிணையம் (வெண்புறா நிறுவனத்திற்கு முன்பாக) கண்டி வீதி, கிளிநொச்சி. (சி-8159)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி

2004 A/L கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம் - 14-06-2003 சனிக்கிழமை. (3325)

### மாறுப்பட்டது

மகேந்தன் என்பவருடைய ஐந்து சிப்பேக் முகமாலையில் இருந்து மல்லாவி செல்லும் பேருந் தில் 11-06-2003இல் பிரயாணம் செய்யும் போது பேக் மாறுப்பட்டது. மாறுதலாக எடுத்தவர்கள் தயவுசெய்து பேக்கை ஒப்படைத்து தங்களுடைய பேக்கைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். முகவரி இராஜ்குமார், சேவியர்கடைச்சந்தி, கிளிநொச்சி. (3323)

### தவறிவிட்டது

11-06-2003 அன்று புதுக்குடியிருப்பில் இருந்து கந்தபுரம் பேருந்தில் பிரயாணம் செய்யும் போது தேசிய அடையாள அட்டையும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய அலுவலக பேக் தவறிவிட்டது. இதை தவறுதலாக எடுத்தவர்கள் தயவுசெய்து சேரன் பணிமனை கிளிநொச்சி அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். இ.சுலோசனாதேவி (சி-8158)


# "சமுத்திர தீபம்" அம்புலன்ஸ் படகு கட்டுமானப் பணி பூர்த்தி

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியில் ஏற்படும் அவசர வைத்திய தேவைகளின் போது செயற்படுத்தவென "சமுத்திர தீபம்" எனும் பெயரில் முதலுதவிப் படகொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகத்தின் நிதி உதவியுடன் தீவகம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மேற்பார்வையில் வடிவமைக்கப்பட்ட இப்படகின் கட்டுமானப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இப்படகின் பூர்த்தி விழாவும், இறைவழிபாட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகள் - இராணுவம் மோதல் ஜெருசலேமில் பதற்றம் அதிகரிப்பு

(ஜெருசலேம்)

ஜெருசலேமில் 16 பேரைப் பலிகொண்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலையடுத்து, காஸா நகரத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் ரொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளது.

இஸ்ரேலியர் மற்றும் பலஸ்தீனர் உரிமை கொண்டாடும் விருதுனர் நகரில் நேற்று முன்தினம் பேருந்து ஒன்றின் மீது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 70 பேர் பலத்தகாயங்களுடன் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் எனும் பாலஸ்தீன தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒருவர் கடந்த 09 ஆம்திகதி இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல்- பலஸ்தீன புதிய அமைதித் திட்டத்திற்கு இரு நாட்டுப் பிரதமர்களும் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், நடந்துள்ள இந்தத்தாக்குதலுக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் உள்ளிட்ட பல தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


# பொதுமக்களுக்கு அறிவித்தல்

## கண்டி-யாழ்ப்பாணம் (A-9) வீதியின் அவசர புனரமைப்பு வேலை

கண்டி-யாழ்ப்பாணம் (A-9) வீதியின் கி.மீ.194 இல் இருந்து கி.மீ.290 வரையிலான பகுதி தற்போது அவசரமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. வீதியின் இப்பகுதியானது போக்குவரத்துக்காக மூடப்படாவிட்டாலும் கூட புனரமைப்பு வேலைகள் காரணமாகப் பிரயாணங்களில் தாமதங்கள் ஏற்படலாமென்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

மேலும் ஓமந்தை அல்லது முகமாலையில் அமைந்துள்ள சோதனைச்சாவடிகளை உரிய நேரத்தில் அடைவதற்கு ஏதுவாக மேற்கூறிய தாமதங்களைக் கருத்தில் கொண்டு தங்கள் பிரயாணங்களை முன்கூட்டியே திட்டமிடுமாறு இப்பாதையைப் பயன்படுத்தும் பொதுமக்களும் வாகனச்சாரதிகளும் வேண்டப்படுகின்றனர்.

இதனால் உண்டாகும் அசௌகரியங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

(3320)


## வடக்கு - கிழக்கில் காணாமற்போனோர்

# 20,000 பேர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வடக்கு-கிழக்கில் போரால் காணாமற்போன 20,000 பேர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு வதிவிட பிரதிநிதி பிலிப்பா நெற்றோ மார்க்குவஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரியில் ஜேர்மனியில் நடைபெற்ற ஐந்தாம் கட்டப் பேச்சுக்களின் போது காணாமற்போனோர் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

போரால் இதுவரை 20,000 மக்கள் காணாமற் போயுள்ளனர். அதிகளவில் காணமற் போனோர் 1990இன் பின்னரே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலகில் குழந்தை இறப்பு வீதம் குறைந்த நாடு சுவீடன்

உலகில் எந்த நாடுகளில் தாய்மார் ஆரோக்கியமாகவும், சுகாதார வசதிகளைப்பெற்றும் வாழ்கின்றார்கள்என்பதைக்கண்டறிய சிறுவர்கள் பாதுகாக்கும் உலக அமைப்பு 117 நாடுகளில் ஆய்வுகளை அண்மையில் மேற்கொண்டுள்ளது.

தாய்மாரின் சிறப்பான அல்லது மோசமான நிலை அந்த நாட்டின் சுகாதார நிலையையே வெளிப்படுத்தும் எனும் அடிப்படையிலும், மகப்பேற்றின் போது இடம்பெறும் இறப்பு வீதமும், பிறந்த ஒரு வருட காலத்தினுள் குழந்தைகள் இறந்து போகின்ற தொகையுமே ஒரு நாட்டில் தாய்மாரின் நிலையைத் தீர்மானிப்பதாக சுகாதார அதிகாரிகள் முடிவு செய்துள்ளார்கள்.

இதன் அடிப்படையில்117 நாடுகளை ஆய்வுக்குட்படுத்தியதில், சுவீடனே முதன்மை பெறுகின்றது.

இங்கு ஆயிரம் தாய்மாரில் ஒருவர் மட்டுமே மகப் பேற்றின் போது இறக்கின்றார்.

ஆகவும் மோசமான சுகாதாரத்தைக் கொண்ட நாடாக 17 ஆவது இடத்தில் நைகர் இருக்கின்றது. இங்கு ஆயிரம் மகப்பேற்றுத் தாய்மாரில் 600 பேர் இறக்கின்றனர்.

இதன்படி சிறப்பான தாய்மார்களுக்கான சுகாதாரத்தைக் கொண்ட முதல் பத்து நாடுகளாவன, சுவீடன், டென்மார்க், நோர்வே, சுவிற்சர்லாந்து, பின்லாந்து, கனடா, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, ஒஸ்றியா, ஐக்கியராச்சியம்(இங்கிலாந்து)

அடுத்து மோசமான சுகாதாரத்தைக் கொண்ட நாடுகளில் இறுதி 10 இடங்களைப் பெற்ற நாடுகளான அங்கோலா, சாட், மாலி, கயானா, செராலோன, யேமன், கயானா-டேவியா, எதியோப்பியா, போகேனியா, நைகர் ஆகியன உள்ளன. அமெரிக்கா பதினொராவது இடத்தைப் பிடித்துள்ளது.

# சொந்த மாவட்டங்களுக்கு 168 ஆசிரியர்கள் இடமாற்றம்

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறித் தென் பகுதிகளில் நியமனம் பெற்ற 168 ஆசிரியர்கள் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு மாற்றப்படவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் ஆறாயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ள போது வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு நியமித்தது பாரபட்சமாகும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தமையையடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆசிரியர்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களுக்கு இடமாற்ற அனுமதி வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போதிய எஞ்சின்கள் இல்லாததால் ரயில் சேவை பாதிப்பு

## -ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

போதியளவு ரயில் எஞ்சின்கள் இல்லாமையே ரயில் சேவைகள் பாதிக்கப்படுவதற்குக் காரணம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

150 எஞ்சின்களும், பவர் தட்டுகளும் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது 133 எஞ்சின்கள் மாத்திரமே உள்ளன. இவற்றுள் சில மிகவும் பழையன. இதன் காரணமாக இவ் எஞ்சின்களைப் பராமரிக்கும் செலவு அதிகரித்துள்ளது என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வைத்திய சிகிச்சை

முல்லைதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நாளை வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து வைத்திய கலாநிதி ஆர்.சுதர்சன் வருகைதந்து சிகிச்சை வழங்கவுள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி அறியத்தந்துள்ளார். (26)

## பொங்கல் விழா

புதுக்குடியிருப்பு வேணாவில் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்குஅபிசேக ஆராதனையுடன் ஆரம்பமாகும். பொங்கல் விழா மறுநாள் காலை அபிசேக ஆராதனையுடன் ஆரம்பமாகி அம்பாள் வீதியுலாவரும் காட்சி இடம்பெற வுள்ளது. தொடர்ந்துமாலைகலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. 17ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

## 'பாத்தீனியம்' செடி அழிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் 'பாத்தீனியம்' செடி தேடியழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றது.

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் தலைமையில் மேற்படி செடியினை ஒழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் திருநகர் கிராமத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் தலைமையில் மனிதவலுமூலம் பாத்தீனியம் செடிதேடி அழிக்கும் நடவடிக்கை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# காற்றாலை மின் உற்பத்தியே இலங்கைக்குப் பொருத்தமானது

## ஆய்வுகள் மூலம் கண்டறிவு

(கொழும்பு)

காற்றைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறையே இலங்கைக்கு மிகவும் பொருத்தமான முறையென்று அமெரிக்க நிலையத்தின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காற்றையும், சூரிய ஒளியையும் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசங்கள் குறித்து உலகம் முழுவதும் ஒரு வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பின்னரே இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆய்வுகள் தொடர்பாக கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்ளும் கருத்தரங்கொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.


# துயர் பகிர்கின்றோம்

## அமரர் கதிர்காமர்

கிளி. புனித அந்தோனியார் றோ. க. வி. உஆம் மைல் கட்டை, முரசுமோட்டை பரந்தன் பாடசாலை ஆசிரியைகளான திருமதி க. மதிவதனியின் தந்தையாரும், திருமதி தி. கோமதியின் மாமனாருமான அமரர் கதிர்காமரின் மறைவையொட்டி அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(3324)

# கண்ணீர் அஞ்சலி

## கந்தர் கதிர்காமர்

எமது தபாலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உபதபாலதிபர் கந்தர் கதிர்காமர் காலமானார். இவர் கண்டாவளை உபதபாலதிபர் வசந்தமலர், எமது காரியாலயத்தில் கடமையாற்றும் திரு.க திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அவரது பிரிவுத் துயரால் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**தபாலக ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
பரந்தன்.

(3322)

# இலங்கையர் ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபா கடனாளி

# 2020 ஆம் ஆண்டு இத்தொகை 5 இலட்சமாகலாம்

## சிறிலங்கா பிரதி நிதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபா கடனாளியாகவுள்ளனர். இக்கடன் 2020 ஆம் ஆண்டளவில் ஐந்து இலட்சமாக மாறக் கூடுமென பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற போது பிரதி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கம் பெறும் வருமானத்தை விட அதிகமான தொகையை அரசாங்கம் முன்னர் பெற்ற வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியாகவும் தவணைக் கட்டணமாகவும் செலுத்தி வருகின்றது. வருடாந்தம் அரசின் சராசரி வருமானம் 30000 கோடி ரூபாவாக உள்ள அதேசமயம் ஏற்கனவே பெற்ற வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டி மற்றும் தவணைக் கட்டணம் என்பவற்றிற்காக 32000 கோடி ரூபா தேவைப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கிரமமற்ற பொருளாதாரக் கொள்கையின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள் சிதறிப் போனதும் அரச கடன் வீதம் அதிகரிக்கக் காரணமாகும். டோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகள் கிடைக்கப் பெற இன்னும் சில வருடங்கள் எடுக்கலாம். இதனால் உடனடிப் பொருளாதாரத் தாக்கம் எதுவும் ஏற்படமாட்டாது என பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

# கல்விமாணிப்பட்ட கற்கைநெறி

# ஆசிரிய மாணவர்களுக்கு மீட்டல் வகுப்பு ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பிரதேச நிலையத்தில் கல்விமாணிப் பட்ட கற்கை நெறியை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்களை இக்கற்கை நெறியின் இணைப்பாளர் எதிர்வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் சந்தித்துப் பல விடயங்களைக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் மீட்டல் வகுப்புக்களும் நடைபெறவுள்ளதால் சகல ஆசிரிய மாணவர்களையும் தவறாது வருகை தருமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் ச.நாகரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (26)

# பார்வையிட்டனர்

தலைமன்னார், பேசாலை போன்ற இடங்களில் சிறிலங்காப் படையினர் தங்கியிருக்கும் இடங்களை மன்னார் அரச அதிபர் தலைமையில் பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர். (மி)

# சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்க சாத்தியப்பாடுகள் தென்படவில்லை

## ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி

(டோக்கியோ)

இடைநிறுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் -சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்று கூறுவதற்கான எந்தவிதமான சமிக்கைகளும் எனக்குக் கிடைக்கவில்லை என ஜப்பானின் சிறிலங்காவிற்கான விசேடதூதுவர் யசுகி அகாஷி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் டோக்கியோவில் சர்வதேச கூட்டு ஜப்பானிய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 'இலங்கையின் வர்த்தக வாய்ப்புக்கள்' பற்றிய கருத்தரங்கின் நிறைவில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்திப்பதற்கு கோரிக்கை விடுத்திருக்கிறேன். அவர் தற்சமயம் லண்டனில் இல்லாதமையால் உடனடியாகச் சந்திக்க முடியவில்லை. ஆனால் விரைவில் இச்சந்திப்பு நடைபெறும்.

டோக்கியோவில் நடைபெற்று முடிந்த உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு பற்றிய விளக்கங்கள் தொலைநகல் மூலம் வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் வன்னியுடன் தொடர்புகளை மேற்கொண்டு வருகிறது. எந்தவேளையிலும் எமது தூதுவர் ஒட்சுகா வன்னி சென்று ஜப்பானிய அரசாங்கத்தின் செய்தியை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பார். டோக்கியோ மாநாடு பற்றியும் விளக்குவார்.

தற்போது முன்னெடுக்கப்படும் புதிய இராஜதந்திர முயற்சி சமாதான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் காணச்செய்யும். இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஜப்பான் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். அதேசமயம் நோர்வே அரசாங்கம் அனுசரணையாளர் பணியை சிறப்பாகச் செய்து வருகிறது என யசுகி அகாஷி மேலும் கூறியுள்ளார்.

# இந்திய – இமாசலப் பிரதேசத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி

(புதுடில்லி)

இமாசலப் பிரதேசத்தின் சட்டசபைத் தேர்தல் 03 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த எட்டாம் திகதி வாக்குப் பதிவுகள் நடைபெற்ற 03 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

பார்மர், லாகோவ், சிற்றி, சினோர் ஆகிய தொகுதிகளைக் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற இமாசலப் பிரதேச சட்டசபைத் தேர்தல்களின் போது கடும்பனி காரணமாக இம் 03 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறவில்லை.

# விலங்குக் கழிவிலிருந்து எரிபொருள்; அமெரிக்க ஆராய்ச்சியாளர் முயற்சி!

பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களின் அதிக தேவையும், அவற்றின் தட்டுப்பாடும் காரணமாக எரிபொருளுக்கு மாற்றுப் பொருளை அல்லது வேறு ஒன்றின் கலவையாக எதனை உபயோகிக்கலாம் எனும் முயற்சியில் புதுவகை எரிபொருளை அமெரிக்காவின் மேற்கு வேர்ஜனிய பல்கலைக்கழக இரசாயனத்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

அதாவது கோழியின் கழிவில் (எச்சம்) இருந்து எண்ணெய் மாதிரியான திரவத்தைத் தயாரித்துள்ளனர். இதனை டீசலில் கலந்து உபயோகிக்கும் போது அபார சக்திவாய்ந்த எரிபொருளாக மாறுகிறது.

அதாவது 65 சதவீதம் டீசலும், 35 சதவீதம் கோழி எச்ச எண்ணெயும் கலக்கப்படுகின்றது. இந்த எரிபொருள் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனித, விலங்குக் கழிவுகளில் இருந்தும் இம் மாதிரியான எரிபொருள் கண்டுபிடிக்கப்படலாமா... எனும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.

# அயோத்தியில் அகழ்வாராய்ச்சியின் போது கோயில் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கவில்லை

(புதுடில்லி)

அயோத்தியில்நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சிப் பணியின் போது,அங்கு கோயில் இருந்தமைக்கான சான்றுகள் எதுவுமே கிடைக்கவில்லை என்று தொல்லியல் துறையினர் கூறியிருப்பதை விஸ்வஹிந்து பரிசத் மறுத்துள்ளது.

அயோத்தியிலுள்ள சர்ச்சைக்குரிய இடத்தில் கோயில் இருந்தமைக்கான ஆதாரங்களைத் திரட்ட அங்கு அகழ்வாராய்ச்சிப் பணியை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி தொல்லியல்துறை அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு வருகின்றது. இதுவரை தோண்டப்பட்டதில் அங்கு ஆலயம் இருந்தமைக்கான எந்தவொரு ஆதாரமும் கிடைக்கவில்லை என்று தொல்லியல் துறை அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையை நிராகரித்துள்ள விஸ்வஹிந்து பரிசத், தொல்லியல்துறையின் அறிக்கை இறுதியானதல்ல என்று அதன்செயலாளர் சுரேந் திரசிங் கூறியுள்ளார்.

தொல்லியல்துறையின் அறிக்கையைக் கொண்டு எந்த வொரு முடிவுக்கும் வந்துவிடக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அயோத்திப் பிரச்சனைக்கு நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று துணைப்பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், லொஸ்ஏஞ்சல், நகரில் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில், அயோத்திப் பிரச்சினைக்கு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்நோக்குவதைவிட அயோத்திப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் வகையில் இருதரப்பினரும் கலந்து பேசி ஒரு முடிவை எட்ட வேண்டும் என்று கூறியுள்ளார்.

அயோத்திப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமோ, நீதிமன்றம் மூலமோ தீர்வு காண்பதை விட கோயில் கட்டுவதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று ஆர்.எஸ் .எஸ் அமைப்புக் கூறியுள்ளது.

இதனிடையே அயோத்திப் பிரச்சினையை அரசியலாக்கியது காங்கிரசும், . கம்யூனிஸ்ட் கட்சியும்தான் என்று பா.ஜ. கட்சியின் அகிலஇந்தியச் செயலாளர்இல.கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அயோத்திப்பிரச்சினை தீர, சங்கராச்சாரியார் எடுத்து வரும் தீவிர முயற்சிகளைத் தமது கட்சி ஆதரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஈராக்கில் அமைதிப்பணிக்கு இராணுவத்தை அனுப்ப இந்தியாவிடம் அமெரிக்கா கோரிக்கை

(புதுடில்லி)

ஈராக்கிற்கு அமைதிப் பணிக்காக இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் இது சம்பந்தமாக இரண்டுமுறை பேசியமத்திய அமைச்சரவைக்கு சில விளக்கங்கள் தேவைப்படுவதால் இது பற்றிய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று துணைப் பிரதமர் அத்வானி ஜோர்ஜ் புஷ்சுடன் நடத்திய பேச்சுக்களின் போது தெரிவித்துள்ளார்.

இந்தியா கோரும் விளக்கங்களை அளிக்க அமெரிக்கக் குழுவொன்றை எதிர்வரும் திங்கட்கிழமை டில்லி அனுப்பி வைப்பதாக சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

அத்துடன் ஈராக் சீரமைப்புப் பணிகளில் இந்தியா பங்கு கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது. ஆனால் அமைதிப்பணிகளுக்காக இந்தியத் துருப்புக்களை அனுப்ப வேண்டும் என்று எந்தவித நிர்ப்பந்தத்தையும் திணிக்க வில்லை என்று துணைப்பிரதமர் அத்வானி தெளிவுபடுத்தியுள்ளார். அமெரிக்காவில் தனது பயணத்தை முடித்துக் கொண்ட அத்வானி லொஸ் ஏஞ்சலிஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

காஷ்மீரின் சனநாயகம் பற்றி பத்திரிகையாளர் எழுப்பிய வினாவுக்குப் பதிலளிக்கையில், ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் தீவிரவாதிகளின் கடுமையான அச்சுறுத்தல் இருந்த போதும்45 சதவீதத்திற்கு அதிகமான வாக்காளர்கள் பங்குகொள்ள எந்தவித கட்டுப்பாடும் இன்றி வெளிப்படையாக நடைபெற்றதாக கூறியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயின் அமைதி முயற்சியை இந்தியா மட்டுமன்றி உலக நாடுகளுமே வரவேற்றுள்ளன. இந்நிலையில் இந்த அமைதி முயற்சிகளுக்கு கிடைக்கக்கூடிய இணக்கமான பதில்களை இந்தியா எதிர்நோக்குகின்றது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக்கிற்கு இந்தியத் துருப்புக்களை அனுப்புவது சம்பந்தமாக விவாதிப்பதற்கு எதிக்கட்சித் தலைவர் சோனியா காந்தியைப் பிரதமர் வாஜ்பாய் அழைத்துள்ளார்.

இப்பேச்சுக்கள் நாளை மறுதினம் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமாக பிரதமர் வாஜ்பாய்க்கு முன்னதாக கடிதம் எழுதியுள்ள சோனியா காந்தி, தனது அச்சம் தெரிவித்திருந்தார்.

ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்புவது தமது நாட்டின் அடிப்படைக் கொள்கையை மீறுவதாகும் என்றும், ஐ.நா. உத்தரவின் பெயரில் அல்லது சர்வதேச அமைதிப் பராமரிப்புப் படையின் ஒரு பகுதியாக மட்டுமே இந்தியத் துருப்புக்களை அனுப்பலாம் என்றும் சோனியாகாந்தி கருத்துக் கூறியுள்ளார்.

# ஆயிரமாவது போட்டியில் ஆந்திரே அகாஸி வெற்றி

சர்வதேச டென்னிஸ் நட்சத்திர வீரரான அமெரிக்காவின் ஆந்திரே அகாஸி தனது ஆயிரமாவது போட்டியில் வெற்றிபெற்று ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் தற்போது ஸ்டெல்லா ஆர்டோயிஸ் சம்பியன் பட்டத்திற்கான டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகின்றது. இப்போட்டியில் பங்கேற்றுள்ள ஆந்திரே அகாஸி முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் இளம் வீரர் பீற்றர் லூஸாத்தை சந்தித்தார். அகாஸிக்கு இது ஆயிரமாவது போட்டி என்பதால், இவ்வாட்டத்தின் முடிவைக் காண ஆயிரமாயிரம் ரசிகர்கள் கூடியிருந்தனர்.

மிகவும் விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 7:6, 6:4 எனும் நேர் செட்களில் அகாஸி அபாரமாக வெற்றிபெற்றார். கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பும் இதே மைதானத்தில் தான் அகாஸி தனது முதலாவது போட்டியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த நிரந்தர சமாதானம் அவசியம்

## முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல்

(கொழும்பு)
நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தல் வேண்டும். டோக்கியோ நிதியுதவிகள் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்களிப்பை வழங்கும். இவ்வாறு சிறிலங்காவின் முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

இந்த நிதிகளின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும்.

டோக்கியோ மாநாட்டில் கிடைத்த நிதிகளை ஒழுங்காகப் பயன்படுத்தினால் நாட்டை பொருளாதார ரீதியில் பெரிதும் முன்னேற்றமடையச் செய்ய முடியும்.

நாட்டின் அபிவிருத்திக்காக டோக்கியோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பெரிதும் சிறந்தவை.

டோக்கியோ மாநாட்டில் இந்த நிதியுதவிகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் போது முக்கியமான மூன்று நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டன. நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகளை மிகவும் உறுதிப்பாட்டுடன் முன்னெடுத்தல் வேண்டும். துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். நாட்டின் வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் என்பனவாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈராக்கில் அப்பாச்சி உலங்குவானூர்தி நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது



ஈராக்கின் மேற்குப் பகுதியில் நேற்று அமெரிக்காவின் அப்பாச்சி ரக இராணுவ உலங்கு வானூர்தியொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

எனினும் இதன் விமான ஓட்டிகள் இருவரையும் அமெரிக்க தரைப் படையினர் மீட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அத்தோடு இப்பகுதியில் அமெரிக்க விமானப் படையினர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேலும், பாக்தாத்தின் வடமேற்கே 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தீவிரவாதிகள் பயிற்சி முகாமொன்றை தாக்கியதாகவும் இதைத் தொடர்ந்து அப்பகுதியில் சண்டை நடைபெற்றதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

## இஸ்ரேலிய உலங்குவானூர்தி தாக்குதலில்

# கமாஸ் இயக்கத் தலைவர் உட்பட ஏழு பேர் பலி; 25 பேர் காயம்!



இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் நேற்று காசாப்பகுதியில் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் கமாஸ் இயக்க சிரேஷ்ட உறுப்பினர் உட்பட ஆறு பலஸ்தீனியர்கள் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன சிரேஷ்ட உறுப்பினர் யசீர் ரஹ்கா, அவரது மனைவி, அவரது பிள்ளை ஆகியோர் பயணம் செய்த கார்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் இம்மூவர்உட்பட ஏழுபேர் பலியாகினர். மேலும் 25பேர் காயமடைந்துள்ளனர். இப்பகுதி நோக்கி ஆறுக்கு மேற்பட்ட ஏவுகணைகள் ஏவப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# ஆந்திர முதலமைச்சர் நாயுடு விரைவில் கொழும்பு வருவார்

ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு விரைவில் கொழும்பிற்கு வருகை தரவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்காவின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு முழுமையான ஆதரவை அவர் தெரிவித்துள்ளதாகவும், இந்தியா - சிறிலங்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து விரிவாக அவருடன் ஆராயப்பட்டதாகவும் சிறிலங்கா வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

தருமபுரம் இல1 அ.த.க. பாடசாலைக்கும், சுண்டிக்குளம் சந்திக் கும் இடையே ஒரு கைப்பை (பேஸ்) முக்கிய ஆவணத் துடனும் பெறுமதியான பொருட்களுடனும், தவறிவிட்டது. (நவநீதா ஆசிரியநியமனக் கடிதம்) கண்டெடுத் தவர்கள் பொது முகாமையாளர் பாண்டியன் நடுவப்பணிமனை விசுவமடுவில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(6) தகவல்: பாலரஜனி

## ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் பளைப் பிராந்திய நிலையத்தில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் மேசன் வேலை, தச்சு வேலை போன்ற பயி ற்சி நெறிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பளை மத்திய கல்லூரி க்கு அருகில் உள்ள பிராந்திய நிலை யத்தில் ஆரம்பமாகவுள்ளதாக தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தி. பிரபாகரன் தெரிவித்துள்ளார். (பா)

## நடவடிக்கை

இலங்கை மின்சார சபை ஊழியர் கள் சம்பள உயர்வு கோரி விரை வில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ள னர். இது தொடர்பாக முதலில் அடை யாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும், தொடர்ந்து தொடர் ச்சியான போராட்டத்திலஈடுபட்டு அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## எதிராக 10 லட்சம்...

பங்களும் திரட்டப்படவுள் ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஆனால் உயர் கல்வியை தனியார் மயமாக்கும் செய்திக்கு மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

## உபவேந்தர்கள்...

நடத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதன் போது தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

பல்கலைக்கழக கல்விச்சீர் திருத்தத்தின் முன்னேற்றம் மேலதிக மாணவர் குழு அனுமதியின் போது பல்கலைக்கழகங்களில் ஏற்படும் தடைகளைத் தவிர்த்தல், பல்கலைக் கழகங்களுக்கான மானிய ஒதுக்கீடு மற்றும் இதர விடயங்கள் பற்றி இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கணக்கு விபரம்...

பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கோரிக்கையை சனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய அவரின் பதில் செயலாளர் விடுத்திருப்பதாக சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2002 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நடைமுறை மூலதனச் செலவினம் உட்பட சபை மேற்கொண்ட நடவடிக்கைகள் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் குறித்து விபரம் தருமாறு அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

# மீளாய்வுசெய்யாதவர்கள் 17ஆம் திகதி மீளாய்வு செய்யலாம்

(அலுவலக செய்தியாளர்)
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்தோர் நிவாரண மீளாய்வுகள் மேற்கொள்ளப்படாத குடும்பங்களுக்கு மீளாய்வுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இது குறித்து கிளி. கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது அவர் தெரிவிக்கையில், மீளாய்வுகள் செய்யத் தவறிய குடும்பங்களுக்கு மீளாய்வு மேற்கொள்ளும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு கிளி/கரைச்சி பிரதேச செயலகத்தில் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெறவுள்ளதெனவும், மீளாய்வு செய்யத் தவறியவர்கள் அன்றைய தினம் தவறாது சமுகமளித்து மீளாய்வுகளை மேற்கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலர் வேண்டியுள்ளார். (சோ)

## - அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் -

# அரச அச்சகர் மீது வழக்கு: ஊழியர்கள் சட்ட உதவிகோரல்

(கொழும்பு)
சிறிலங்கா சனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான அபிவிருத்தி லொத்தர்சபை விவகாரம் புதிய வடிவம் எடுத்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர்சபை தொடர்பாக சனாதிபதி விடுத்த பிரகடனம் குறித்தும் அதனால் ஏற்பட்ட தாக்கம் குறித்தும் அரச அச்சக ஊழியர்கள் சட்ட உதவியை நாடியுள்ளனர்.

இது குறித்து அரச அச்சகர்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ள அதே வேளை, பொலிசார் மீது இன்னுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, அரச அச்சக ஊழியர்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக அடிப்படை மனித உரிமைமீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யவுள்ளனர்.

# ஜப்பானுடன் பொருளாதாரக் கூட்டு: சாத்தியங்கள் பற்றி சிறில. ஆராய்வு

(கொழும்பு)
ஜப்பானுடன் நெருக்கமான பன்முக பொருளாதார கூட்டை ஏற்படுத்தும் சாத்தியங்கள் குறித்து சிறிலங்கா அரசு ஆராய்ந்து வருகின்றது.

இது குறித்து ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சிறிலங்காப் பிரதமர் வெளிவிவகார அலுவலகத்தை பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுடன் பொருளாதார உடன்படிக்கைகள் அல்லது சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொள்வதை முக்கிய குறிக்கோளாகக்கொண்ட சிறிலங்கா அரசு அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது.

இந்த நிலையில் சிறிலங்காவுக்கு பலமான சர்வதேச வர்த்தக பங்காளியாக ஜப்பானை இணைத்துக்கொள்வது குறித்து சிறிலங்கா அரசு ஆராய்ந்து வருகின்றது.

# திருமலையில் டெங்குக் காய்ச்சலால் சிறுமி புதனன்று மரணம்

திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது டெங்கு நோயாளி நேற்று முன்தினம் மரணமடைந்ததாக மாகாண சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆறு வயதுச் சிறுமிஒருவரே டெங்குக் காய்ச்சலுக்குப் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கந்தளாயில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு உள்ளூர் அரசாங்க மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து டெங்கு நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைக் காரியாலயத் திறப்பு விழா

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் தலைமைக் காரியாலய திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. காரியாலயத்தினை கொழும்பு ராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கணானந்தஜி திறந்து வைக்கவுள்ளார்.

## போராளியை

கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் சமாதான விரோதசக்திகளின் செயல் களைக் கண்டித்து மேற்படி ஹர்த் தால் நடாத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது. இவரை ராசிக் குழுவினர் கைது செய்து பொலிசாரிடம் ஒப் படைத்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச மருத்துவ...

லைகள் போன்றவற்றிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் பி. தயாரட்ண சம்பள சீராக்கத்தை எதிர்வரும் 18 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதாக எழுத்து மூலம் உறுதியளித்திருந்தார். ஆயினும், நேற்றுக் காலை அரச மருத்துவ உத்தியோகத்தர் சங்கத் தலைவர் தலைமையில் கூடிய நடவடிக்கைக்குழு அமைச்சரவையில் சமர்ப்பித்து சுற்று நிருபம் வெளியிடப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய்வது என்று தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே, முன்வைக்கப்பட்ட சம்பள உயர்வு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இவர்களது போராட்டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.